DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.2/2026**

Prosecution witness **PW.8 (LW.11)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Jeevanantham | Caste | : | |
| Father Name | : | Rajangam | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 48 |
| Time | : | | | | |

**(Accused absent. Petition filed and allowed.. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **22.06.2026**

**22.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது சோலூர்மட்டம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2025 ம் தேதி கேத்தி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் கேத்தி காவல் நிலைய உவி ஆய்வாளராக இருந்த திரு.சேகர் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.46/2025 சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) பிஎன்எஸ் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு அன்றைய தினமே எடுத்துக்கொண்டு உதவி ஆய்வாளர் திரு.சேகரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மறுநாள் 11.10.2025 ம் தேதியில் பகல் 12.30 மணிக்கு வழக்கின் சம்பவயிடத்திற்கு சென்று அங்கிருந்த சாட்சிகள் நாகராஜ், கீர்த்தனா ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் (**அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதே சாட்சிகள் முன்பு 13.30 மணிக்கு எதிரி வாதியை தாக்க பயன்படுத்திய சுமார் 90 மீட்டர் நீளமுள்ள கம்பு ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

3. பின்னிட்டு அன்றைய தினமே சாட்சிகள் சார்லஸ், சிவக்குமார், செரின், விமல்குமார், மௌலின், நாகராஜ், கீர்த்தனா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே சுமார் 14.30 மணிக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி சசிக்குமார் என்பவரை அவரது வீட்டு முன்பு வைத்து கைது செய்து, தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் 23.10.2025ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த உதகை அரசு மருத்துவமனை மருத்துவர் வினோதினி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்தேன். மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் அன்றைய தினமே வழக்கின் சட்டப்பிரிவை 296(பி), 118(2), 351(3) ஆக சட்டப்பிரிவை மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்தை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் (**அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை –</u>

1. சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சேகர் அவர்கள் தவறாக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை எனது புலன் விசாரணைக்கு எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை இரவு 08.00 மணிக்கு பதிவு செய்துள்ளதால் நான் எத்தனை மணிக்கு எனது புலன் விசாரணையை ஆரம்பித்தேன் என்றால் சுமார் 21.00 மணிக்கு ஆரம்பித்தேன். அன்றைய தினம் இரவு நேரம் என்பதாலும் மழை அதிகமாக இருந்ததாலும் சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 1 முதல் 8 சாட்சிகள்

உதகை கிரீன் பீல்டில் பணிபுரிபவர்கள் என்றால் சாட்சி எண்.2, 3 ஆகியோர்கள் மட்டும் தான் உதகை கிரீன் பீல்டில் பணிபுரிபவர்கள் ஆவார்கள். சம்பவயிடத்திற்கு சென்ற போது அவர்கள் தான் அந்த சமயத்தில் கணக்கெடுப்பதற்காக வந்தார்கள்.

2. மற்ற சாட்சிகளுக்கும் கிரீன்பீல்டிலுள்ள வெரிட்டாஸ்க்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். நான் மருத்துவரை விசாரித்த போது குறிப்பிட்டு காயங்கள் பற்றி கூறவில்லை என்றால் விபத்து பதிவேட்டில் தெளிவாக கூறியிருந்ததால் கொடுங்காயம் என்று மட்டும் கூறியுள்ளார். நான் மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், விபத்து பதிவேட்டையும் காயச்சான்றிதழையும் பார்த்து நானாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின் புகார்தாரரை விசாரிக்கவில்லை என்றால் ஏற்கனவே உதவி ஆய்வாளர் சேகர் அவர்களின் விசாரணையில் சொன்னதை தான் என்னிடமும் சொன்னதால் தனியாக நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3. அ.சா.1 னிடம் விசாரித்ததாக கூறியதற்கு எதிரி பைனான்ஸ்சில் கடன் வாங்கிருந்த விவரத்தை கூறினாரா என்றால் கூறினார். ரூ.25,000/- பாக்கி செலுத்த வேண்டிய நிலுவை இருப்பதாக கூறினார். அந்த விவரத்தை அ.சா.1 ன் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 உடன் சம்பவத்தின் போது யார் யார் இருந்தார்கள் என விசாரித்தேனா என்றால் அ.சா.1 உடன் யாரும் இல்லை. நான் பைனான்ஸ் கம்பெனியில் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 தானாக விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயம் என்றும், நான் எந்த சாட்சியையும் விசாரிக்காமல் கிரீன்பீல்டிலுள்ள வெரிட்டாஸ் பைனான்சில் வேலை செய்பவர்களை மட்டும் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன முறையில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், பைனான்ஸ் சம்பந்தமாக விசாரணை செய்ய வேண்டும் என எதிரியை அழைத்து பொய்யான

வழக்கிற்காக புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் விறகு அடுக்கி வைத்திருந்த இடத்திலிருந்து ஒரு குச்சியை எடுத்து சான்றுபொருளாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரிக்காமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.